**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

## MCOP.No.65/2022 P.W.2

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | ரவீந்திரன் |
| த/பெ. | குலியமூர்த்தி |
| வயது | |
| வசிப்பிடம் | எண்.2/4, அக்ரகாரம் தெரு, தென்மண்டலம், விழுப்புரம் |
| தொழில் | கணக்காளர் |

**முதல் விசாரணை 18.03.2026**

நான் இந்த வழக்கில் 2ம் மனுதாரர். இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எனது ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.14, அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.15.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

இறந்துபோன நபர் எனது கம்பெனியில் வேலை செய்தார் என்றால் சரிதான். அவருக்கு உதவ வேண்டுமென்ற நோக்கத்தில் விபத்தை பார்க்காமலே பார்த்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 108 அவசரஊர்தியில் அழைத்து சென்றேன். போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். குற்ற அறிக்கையில் சாட்சி பட்டியலில் எனது பெயர் போடப்பட்டுள்ளதா என்றால் போடப்பபட்டுள்ளது. நான் நடுவர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், அவ்வாறு பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை